அரை கிலோ ஆவின் நெய்; அதுமட்டுமல்லாமல், 200 மி.லி. Iron Syrup 3 Bottles, deworming-*க்காக* Albendazole *என எல்லாம் சேர்த்து 'அம்மா தாய்-சேய் நலப் பெட்டகம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஓர் அற்புதமான வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தை தற்போது அறிவித்து, அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வெகுவிரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைப்பார்கள். இந்தத் திட்டம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிச்சயமாக ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்து, வரும் காலத்திலே இந்தியாவிலே ஒரு முதன்மைத் திட்டமாக விளங்கும். ஏற்கெனவே சுகாதாரத் துறையில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை, முனைப்பான திட்டங்களை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துகின்ற மாநிலம் தமிழகம் என்று உலக சுகாதார நிறுவனத்தால் பாராட்டப்படுகின்ற அந்த வரிசையிலே, இந்தத் திட்டமும் அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***5252—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்ட அரசாணை (நிலை) எண்

125, வருவாய்த் துறை, நாள் 21-4-2017-ன்மூலம் ரூபாய் 2 கோடியே 61 இலட்சத்து 79 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வருவாய்த் துறைக்குச் சொந்தமான தாளவாடி கிராமம், புல எண் 436/2-ல், 0.20.0 ஹெக்டேர் இடம் தேர்வு செய்து, 19-1-2018 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்பொழுது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் எங்கள் இல்லங்களிலும் உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் குடும்ப குல தெய்வம், என்னை வாழ வைத்த மனித தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி சிரம் தாழ்த்தி பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன். எங்களை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. K.A.S. அவர்களையும், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. K.C.K. அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் கடந்த 19-1-2018 அன்று பூமி பூஜை போடப்பட்டு பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. கேள்வி கேட்கும் முன்னே மின்னல் வேகத்தில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு எனது சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு நீர்நிலைப் புறம்போக்கு மற்றும் இதர பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற 3 இலட்சம் மக்களுக்கு நிரந்தரமாக வீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கேற்ப, தனியார் நிலங்களைக்

2018 மார்ச் 21]

கையகப்படுத்தி, ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க புதிய திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி வட்டம் மலைப் பகுதி திங்களூர் 'A' கிராமம், திங்களூர் 'B' கிராமப் பொது மக்கள் தங்கள் அத்தியாவசியப் பணிகளைச் செய்ய 88 கிலோ மீட்டர் தூரமுள்ள தாளவாடி வனப் பகுதி வழியாக தாளவாடிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. 30 கிலோ மீட்டர் தூரமுள்ள சத்தியமங்கலம் வட்டத்துடன் மேற்படி இரண்டு கிராமங்களையும் இணைத்து வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்க் கிராமங்களைப் பிரிப்பதைப் பொறுத்த அளவிலே உயர்மட்டக் குழு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வருவாய்க் கிராமங்கள் பிரிப்பதற்காக உள்ள அந்த உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்காகப் பரிந்துரை செய்து, தகுதியின் அடிப்படையிலே அது பிரித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தாளவாடி வட்டம் என்ற புதிய வட்டத்தையும், சத்தியமங்கலம் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட நம்பியூர் வட்டத்திலுள்ள 4 கிராமங்களையும், ஏற்கெனவே உள்ள சத்தியமங்கலம் வட்டத்தையும், அதாவது மூன்று வட்டங்களையும் ஒருங்கிணைத்து, சத்தியமங்கலத்தில் புதிய வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டுகிறேன். பொது மக்கள் எளிய முறையில்*

பொது சேவையைப் பெறும் வாய்ப்பை மேம்படுத்த, இந்தக் கோட்டாட்சியர் அலுவலகத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகை, பரப்பளவு, வருவாய்க் கிராமங்கள், வட்டங்கள் அதனுடைய அடிப்படையிலே புதிய கோட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தகுதியின் அடிப்படையில் புதிய கோட்டம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

69—

தொழிற்பேட்டை

***2103—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.